111—

ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

வினா எண் 55512—திரு. எஸ்.ஆர் பார்த்திபன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவ முறைகளில் உள்ள ஐந்து மருத்துவமுறைகளான சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா (ம) இயற்கை மருத்துவம் ஆகிய அனைத்து பிரிவுகளிலும் அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைந்திருப்பது நாட்டிலேயே நமது மாநிலத்தில் தான். இதில் ஆயுர்வேத அரசு மருத்துவக் கல்லூரி கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாரில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இது தவிர 3 சுயநிதி ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இவை ஆயுர்வேத மருத்துவத்தின் தற்போதைய தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளது. எனவே, இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய அரசு ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி துவக்கிட அவசியம் எழவில்லை.

112—

சித்த மருத்துவ சிகிச்சை

வினா எண் 57428—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவ சிகிச்சை தினந்தோறும் அளித்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 954 இந்திய மருத்துவ முறைப் பிரிவுகள் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 432 சித்த மருத்துவப் பிரிவுகள் முழு நேரப் பிரிவுகளாகும். இப்பிரிவுகள் வாரத்தின் அனைத்து நாட்களிலும் அதாவது திங்கள் முதல் சனி வரை முழு நேரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் முற்பகல் மட்டும் செயல்பட்டு வருகிறது.

113—

பல் மருத்துவக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 59893—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்மிடிப்பூண்டியில் அரசு பல் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தற்போது சென்னை மாவட்டத்தில் ஒரு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையும் மற்றும் பல்வேறு அரசு மருத்துவமனைகளில் பல் மருத்துவப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. தற்போது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS